## 1. ஆய்வுகள்

# ஆய்வுக் குழு

மாணவர் ஆய்வு மன்றத்தின் மூலம் எமது ஆய்வுக் குழுவிற்கு இரண்டாம், மூன்றாம் வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்டு இந்த ஆய்வுக் குழுவின் செயற்பாடுகள் நகர்ந்தன. மாணவர்களின் ஆய்வு தொடர்பான ஆர்வத்தை அதிகரித்து சிறந்த ஆய்வாளர்களை உருவாக்குவதே இக்குழுவின் நோக்கமாகும். பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கிற்கு மாணவர் ஆய்வு மன்ற உறுப்பினர்களினால் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே இதன் பிரதான இலக்காகும். மேலும் மாணவர் ஆய்வு மன்றத்தின் மூலம் சர்வதேச ஆய்வரங்கென்றை நிகழ்த்த வேண்டும் என்பது எமது பாரிய எதிர்ப்பார்ப்பாக உள்ளது. இக்குழுவின் முக்கிய செயற்பாடுகள்:

1. கள ஆய்வுகள்
2. சமூகவியல் ஆய்வுக் கட்டுரைகள்
3. ஆய்வுச் சஞ்சிகை

- **கள ஆய்வு**

2018.06.27 ஆம் திகதி மாணவர் ஆய்வு மன்றத்தின் மூன்றாம் வருட மாணவர்கள் 45 பேர்கள், விரிவுரையாளர்கள் 5 பேர்கள், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப் பீடத்தின் பீடாதிபதி உட்பட 51 பேர்கள் கள ஆய்வென்றை மேற்கொண்டிருந்தனர். அட்டாளைச்சேனையில் மிகவும் வறுமை கோட்டின் கீழ் வாழும் சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் பிரதேசங்களை மையப்படுத்தி 10 தலைப்புக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் சில இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழிப் பீட 5வது சர்வதேச ஆய்வு அரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. மாணவர்களின் பெயரும் ஆய்வுத் தலைப்புக்களும், ஆய்வுச் சுருக்கமும் பின்வருமாறு :

1. ***அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய கள ஆய்வு***

(W. Waseem Akram, SLM. Farshath , MNM. Insyraf , MT. Hidayathulla )

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி மனிதனுக்கான முக்கிய உரிமையாக இருந்த போதிலும் அதனைத் தொடராகப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக பல காரணிகள் உள்ளன. பாடசாலை இடைவிலகல் அவற்றுள் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய ஒரு காரணியாகும். அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்புநகர் மற்றும் ஆலம்குளம் ஆகிய இரு பின்தங்கிய கிராமங்களில் பாடசாலை இடைவிலகல் அவதானிக்கப்பட்டதால் அவ்விரு பிரதேசங்களையும் மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை இடைவிலகல் இருக்கின்றதா? என்பதை கண்டறிவதோடு மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களை இனங்காணுவதையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை அடையும் வகையில் முதலாம்நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. முதலாம்நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக நேரடியாக அப்பிரதேசங்களுக்குப் பலமுறை சென்று உரியவர்களிடம் கலந்துரையாடல்கள் நடைபெற்றது. அப்பிரதேசங்களின் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து நேர்காணலின் மூலமும் இரண்டாம்நிலைத் தரவுகளை பாடசாலை ஆவணங்கள், பிரதேச செயலக ஆவணங்கள், ஆய்வுகள், கட்டுரைகளின் ஊடாகவும் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் Excel விரிதாள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, விபரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசங்களில் பாடசாலை இடைவிலகல் தெளிவான காணப்படுவதனையும் அது தரம் 6-11 இல் வளர்ச்சியடைந்து வருவதனையும் கண்டறிய முடிந்தது. அத்தோடு மாணவர் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும்

காரணிகளாக வறுமை, தொழில், இளவயதுத் திருமணம், பெற்றோர்களின் கவனக்குறைவு, போக்குவரத்துக் கஷ்டம், பாதுகாப்பின்மை, மாணவர்கள் கல்வியில் ஆர்வமின்மை போன்றன இனங்காணப்பட்டன. இறுதியில் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சில விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 2. *முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணமும் அதன் தாக்கங்களும் - சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் பிரதேசங்களை மையப்படுத்திய ஆய்வு*

( L.F HILMA , M.M SIYANA , M.F.F HIFRA, F RAKSHANA )

**ஆய்வு சுருக்கம்**

பல்வேறுபட்ட சமூகவியல் காரணிகளின் அடிப்படையில் பெண்களின் திருமண வயது முற்படுத்தப்படுகின்றது. இலங்கைச் சட்டத்திற்கு அமைவாக பெண்களின் திருமண வயதானது சர்ச்சைக்குள்ளான ஒரு பகுதியாகவே காணப்படுகிறது. இலங்கையில் பல இடங்களில் இளவயது திருமணம் அதிகரித்துக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் அட்டாளைச்சேனை சம்புநகர் மற்றும் ஆலங்குளம் பிரதேச முஸ்லிம் பெண்களின் திருமண வயது மிகவும் குறைவானதாகவே உள்ளது. இவ்வாய்வு அப்பிரதேசத்தில் இளவயது திருமணத்தின் காரணங்களை இனங்கண்டு அத்திருமணம் அவர்களின் வாழ்வில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகிறது எனவும் எவ்வாறான பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் அப்பெண்கள் முகங்கொடுக்கின்றனர் என்பதையும் கண்டறிவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். சமூகவியல் கலப்பு ஆய்வான இதில் முதலாம் நிலைத்தரவுகளாக பிரதேச முஸ்லிம் பெண்களிடம் பெறப்பட்ட வினாக்கொத்து, கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வு தொடர்பான முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் பொருளாதார பிரச்சினை, காதல் விவகாரம், வழக்காறு என்பன முக்கியமாக அமைவதுடன் அத்திருமணத்தின் மூலம் அப்பெண்கள் உடல், உள, சமூக, பொருளாதார ரீதியான பல பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்குகின்றனர் என்பது கண்டறியப்பட்டது. மேலும் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆலோசனைகளும் இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளமை

## 3. *கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் - சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் பிரதேசங்களை மையப்படுத்திய ஆய்வு*

(SMF Nuskiya, MNF Nisrin , MSP Sabrina , MSM Begam )

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒரு பகுதியாகும். அது ஒரு சமூகத்தின் எழுச்சிக்கு பாரிய பங்கு வகிக்கிறது. கல்வியில் பின் தங்கிய ஒரு சமூகம் எல்லாவற்றிலும் பின்னடைந்தே இருக்கும். அந்த வகையில் எமது ஆய்வுப்பிரதேசமான ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இரு கிராமங்களாகும். இங்கு கல்வியைத்தொடர ஆர்வமுள்ள பல மாணவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு கல்வியைத்தொடர போதிய வளங்கள் காணப்படாமையும் பொருளாதாரமும் பாரிய சவால்களாக காணப்படுகின்றது. கற்கும் வயதிலள்ள அதிகமான மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி உள்ளனர். ஆதனடிப்படையில் பின்தங்கிய நிலையில் காணப்படும் இக்கிராமங்களின் கல்வி மேன்பாட்டிற்கான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் இவ்வாய்வின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன. பண்புரீதியானதாகக் காணப்படும் இவ்வாய்வின் முடிவுகளுக்காக முதலாம் நிலைத் தரவுகளான வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் மறைமுக உரையாடல் என்பவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## *4. சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் கிராம மக்கள் வனவிலங்குகளால் எதிர்நோக்கம் பிரச்சினைகள்*

( M.I.S NISHAYA , A.R.F RILASHA, M.M.F RIHANIYA)

**ஆய்வுச் சுருக்கம்**
இன்று உலகில் பரந்து வாழும் பல்வேறு கிராம மக்கள் பல விதமான பிரச்சினைகளையும் சவால்களையும் தினமும் எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமாக இனங்காணப்படக்கூடிய ஒரு பிரச்சினையாக வனவிலங்குப் பிரச்சினை காணப்படுகிறது. இவ்வனவிலங்குப் பிரச்சினையால் கிராம மக்கள் உயிர் சேதம், உடமை சேதம், விவசாய நில இழப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமாகவே உள்ளனர். இவர்களுக்கான தீர்வுகள் உரிய கால அடிப்படையில் அரசினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாய்வு அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனைப் பகுதிக்குட்பட்ட ஆலங்குலம் மற்றும் சம்புநகர் ஆகிய கிராமங்களை உட்படுத்திய ஆய்வாகும். ஆவ்வூர் மக்கள் எவ்வகையான வனவிலங்குகள் மூலம் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். மற்றும் அதன் மூலம் அவ்வூர் மக்கள் முகம் கொடுக்கும் இழப்புக்களும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கான சில பிரச்சினைகளையும் இவ்வாய்வு வெளிக்கொணர எத்தனிக்கின்றது. இவ்வாய்வுக்காக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## *5. வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பு நகர் பிரதேசத்தை மையப்படுத்திய கள ஆய்வு*

( S.F AYSHA, M.N.N AARA, M.N MISBA, R RAISDEEN )

**ஆய்வுச் சுருக்கம்**
ஒரு மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் அதற்கான செலவீனங்களை எதிர்வு கொள்வதற்கும் மற்றும் தனக்கான நிலையான வாழ்வொன்றினை ஏற்படுத்துவதற்கும் வாழ்வாதாரம் தேவைப்படுகின்றது. அவ்வாழ்வாதாரம் இல்லாதபோது, அது அவனது அனைத்துத் துறைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

ஆய்வுப்பிரதேசமான சம்பூநகர் கிராமத்தில் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளை, சவால்களை கண்டறிதலை பிரதானமாகவும் குறிப்பிட்ட அம்மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் அம்மக்களின் அன்றாடத் தொழில் முயற்சிகளை கண்டறிதல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புரீதியானதாகக் காணப்படும் அதேவேளை சுமார் 75 குடும்பங்களைக் கொண்ட முழுக்கிராமமும் ஆய்வுக்குற்படுத்தப்பட்டது. இதன்போது நேர்காணல் மற்றும் அவதானம் என்பவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் வாழும் அதிகமான மக்கள் அங்கவீனர்களாக உள்ளதால் இம்மக்களது வாழ்வாதார மேம்படுத்தலில் அது பாதிப்புச் செலுத்துகின்றது. ஒரு நாளப் பொழுதைக் கழிப்பதில் கூட இம்மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். திருப்தியற்ற உணவு, உடை, இருப்பிடம், குடிநீர் வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் தொழில் வசதி என்பவற்றுக்கு மத்தியில் அம்மக்களின் வாழ்க்கை தாண்டவமாடுகிறது. மருத்தவம், தொழில் வசதிகள் மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி போன்றவற்றைப் பெற வெளிப் பிரதேசங்களை நாடிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் காணப்படுகின்றது. இதனால் இவ்வாய்வுப் பிரதேசத்தில் வாழ்பவர்களின்

வாழ்வாதாரமானது திருப்தியானதாக இல்லை என்ற முடிவிற்கு வரலாம். மேலும், இப்பணிக்கான பங்களிப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

### *6. இளவயதில் விவாகரத்து பெற்ற முஸ்லிம் குடும்ப தலைவிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் - சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் பிரதேசங்களை மையப்படுத்திய ஆய்வு*

( M.Y.F NOUFIYA, M.H HUSNA, M.U.F AZRA, B.M.F NUSKIYA)

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகக் கட்டமைப்பு சிதைந்து விடாமல் பாதுகாப்பதற்கான அரணாக குடும்ப வாழ்வை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. குடும்ப வாழ்வின் நோக்கம், தேவைகள் மகிழ்ச்சிகரமான விவாக வாழ்க்கைக்கான அடிப்படைகளை இஸ்லாம் விரிவாக முன்வைத்துள்ளது. ஆயினும் ஓர் ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்வில் தொடர்ந்தும் இணைந்து வாழ முடியாத சூழ்நிலை உருவாகும் போது இஸ்லாம் தவிர்க்க முடியாத நிலையில் விவாக விடுதலையை அனுமதிக்கின்றது. அதனை ஊக்குவிக்கவில்லை. இப்பிண்ணனியில் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் போன்றன மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் கிராமங்களாகும். அங்கு வாழும் மக்கள் குடும்ப வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் தமது வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் பல விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றன.இது பல குடும்பச் சீரழிவுகள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கின்றன. அதனடிப்படையில் பின்தங்கிய நிலையில் காணப்படும் இக்கிராம வாழ் மக்களின் வாழ்வை சீர்செய்வதற்கான முன்மொழிவுகளும் இளவயது விவாகரத்து இடம்பெறுகின்ற அளவைக் குறைப்பதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவ்வாய்வின் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. பண்பளவிலான மற்றும் எண்ணிக்கையளவிலான இவ்வாய்வின் முடிவுகளும் வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் போன்றவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் நிலைத்தரவுகளும் நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவற்றினூடாக இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### *7. சமூக பொருளாதார காரணிகளை இனங்காணல் -ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு*

(M.F SHAHWANA, A. AJEEBA, Y RINOSIYA )

**ஆய்வுச் சுருக்கம்**

அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலங்குளக் கிராமத்தின் சமூக, பொருளாதாரம் பின்னடைந்து காணப்படுகின்றன. எனவே இவற்றுக்கான காரணங்களை கண்டறிய ஆய்வு அவசியமாகின்றது. அந்த வகையில் சமூகப் பொருளாதாரப் பின்னடைவுக்கான காரணங்களை கண்டறிதலை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்புரீதியான ஆய்வு முறையிலான இக்கட்டுரை ஆய்வுப் பிரதேசத்தில் எழுமாறாக 25 நபர்களிடம் பேட்டிகாணல் முறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டதோடு, எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 30 பேரிடம் வினாக்கொத்து முறையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இக்கிராமத்தின் சமூகப் பொருளாதாரப் பின்னடைவுக்கு பல காரணிகள் வழிகோலியுள்ளன. அவற்றில் சமூக ரீதியான பிரதான காரணியாக குறைந்த கல்வியறிவு, கல்வியறிவின்மையே காணப்படுகின்றன. அத்தோடு இளவயதுத் திருமணம், இளைஞர் வழிகாட்டலின்மை , போதைப்பொருள் பாவனை போன்ற காரணிகளும் சமூகப் பின்னடைவுக்கான முக்கிய காரணிகளாகும். பொருளாதாரப் பின்னடைவுக்குரிய பிரதான காரணியாக அமைவது நிரந்தர தொழிலின்மையே ஆகும். மேலும் சொந்தக்காணியின்மை, தொடர்ச்சியான வறுமை, நீர்வசதியின்மை, மேய்ச்சல் நிலமின்மை போன்ற காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். இவ் ஆய்வை ஆலங்குளக் கிராமத்தின் சமூகப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான முன்னெடுப்பாகக் கொள்ளலாம்.

### 8. *இளைஞர்களுக்கு மத்தியில் போதைவஸ்து பாவனையின் ஊடுருவலும் அதன் தாக்கங்களும்: (அட்டாளைசேனை ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)*

(SLM. Nafeer )

**ஆய்வுச் சுருக்கம்**

இளைஞர்களுக்கு மத்தியில் போதை வஸ்து பாவனையின் ஊடுருவலும் அதன் தாக்கங்களையும் கண்டறிதல் இதன் தலையாய நோக்கமாகும். இவ்வாய்வு பண்புரீதியாக அமைந்ததாகும், ஆய்வுப் பிரதேசத்தில் போதைப்பொருள் பிரச்சினையை கையாளுகின்ற கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் இளைஞர்களிடம் களஆய்வின் மூலம் பெறப்பட்ட நேர்காணலின் தரவுப்பகுப்பாய்வினையும், பெறப்பட்ட தகவல்களையும் மையப்படுத்தி செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருள் பாவனையானது இளைஞர்களை அடிமையாக்கியுள்ளது. ஆகவே போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தாக்கங்களை இனம்கண்டு பாதுகாப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரை செய்வதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது.

- **சமூகவியல் ஆய்வுக் கட்டுரைகள்**

2018.12.29 இல் இடம்பெற இருந்த இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப் பீட 5வது சர்வதேச ஆய்வு அரங்கை முன்னிட்டு ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டன. மாணவ ஆய்வு மன்றத்தின் உறுப்பினர்களிடமிருந்து அதிகமான ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

### 1. *நூலகத்தை உபயோகிப்பதில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு : ஓர் மதிப்பீட்டாய்வு (இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு)*

(MS. Zunoomy, APM. Asan - மூன்றாம் வருடம்)

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பு செய்பவைகளாக நூலகங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நாட்டிற்கு சேவை செய்யும் புத்திஜீவிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்கள் நூலகத்தை சுமந்திருப்பது அத்தியவசியமானதொன்றாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு துணைபுரிதல், அறிவை பெற்று வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக பல்கலைக்கழகங்களில் நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. எனினும் அவற்றின் மூலம் மாணவர்கள் பூரண பயனடைவது பற்றி மீள் பரிசீலனை செய்வது காலத்தின் நிர்ப்பந்தமாகி விட்டது. இத்தோரணையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொது நூலகத்தை மையப்படுத்தி மாணவர்களுக்கும், நூலகத்திற்கும் இடையிலான தொடர்பை வெளிக்கொண்டுவரும் முகமாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த முன்னூறு மாணவர்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். இதில் முதல் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம், நேர்காணல் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இரண்டாம் நிலைத்தரவுகள் நூற்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. இவ்வாய்வின் தரவுகள் அனைத்தும் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பொது நூலகத்துடனான மாணவர்களின் தொடர்பை வெளிக்கொண்டு வருதல், சிறந்த முறையில் நூலகத்தை பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல் ஆகிய இரு பிரதான நோக்கங்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலகத்தை பயன்படுத்துவது அவசியம், நூலக வசதிகள் திருப்திகரமான உள்ளது, கற்றலுக்கான சூழல் கிடைக்கப்பெறுகின்றது போன்றவற்றை மாணவர்கள் ஏற்றுக்கொண்டாலும் நூலகத்தில் நேரம் செலவிடுவதில், நூலகத்திற்கு வருகை தருவதில், நூற்களை அதிகம் இரவல் பெறுவதில்

அவர்கள் கவனயீனமாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது பொது நூலகம் கற்றலுக்கான வசதிகளை போதியளவு கொண்டிருப்பினும் அதனை பயன்படுத்தி பிரயோசனமடைவதை விட்டும் மாணவர்கள் கவனயீனமாக உள்ளனர் என்பதை இவ்வாய்வின் முடிவாக எடுத்துக்கொள்ளலாம். மாணவர்களை விழிப்புணர்வு பெறச்செய்வதில் இவ்வாய்வு உந்துசக்தியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2. ***அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வியின் நிலை (க.பொ.த. சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு)***

(N.Mohammed Misbah - - மூன்றாம் வருடம்)

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய வர்த்தக உலகில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் அளவிட முடியாததாகும். இன்னும் தகவல் தொழில்நுட்ப விருத்தியும் ஆங்கிலக் கல்வி அத்தியாவசியமாக இருப்பதற்கு மற்றொரு காரணியாக உள்ளது. இதனால் பாடசாலைக் கல்வியானது ஆங்கிலக் கல்வியை முக்கியப்படுத்தும் நிலையமாக உள்ளது. இருப்பினும் இன்றைய அளவில் பாடசாலை மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியானது பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால் முஸ்லிம் மாணவர்களிடையேயான ஆங்கிலக் கல்வி மட்டத்தினை அறிந்து, அதனை மதிப்பிட்டு அவர்கள் பின்தங்குவதற்கான காரணங்களையும் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதே எமது நோக்கமாகும். இவ் ஆய்வானது அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சாதாரண தரத்தை உள்வாங்கிய ஆறு பாடசாலைகளில் இருந்து எழுமாறாக மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா 30 மாணவர்கள் வீதம் மொத்தமாக 90 மாணவர்களை கொண்டமைந்த மாதிரியாகும். இவ் ஆய்வானது தொகை ரீதியான தரவுகளை கொண்டதாக அமைந்துள்ளதுடன் வினாக்கொத்து முறையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது முதலாம் தர மற்றும் இரண்டாம் தர தரவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வினூடாக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முஸ்லிம் மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி பின்தங்கி உள்ளமையும், அதில் திருப்தியற்ற நிலையும் காணப்படுகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் இன்னும் வினைத்திறன் உள்ளதாக மாற்றி அமைக்கப்படல், பிள்ளைகளுக்கு ஆரம்ப பாடசாலைகளில் இருந்தே ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவூட்டி அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் வீட்டுச்சூழலை ஆங்கில மொழி விருத்திக்கேற்ற வகையில் அமைத்தல் வேண்டும் என்பன இவ்வாய்வின் முடிவாகப் பெறப்பட்டுள்ளன.

3. ***"த.்.வா பணிக்காக சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதில் ஆலிம்களின் நிலைப்பாடு" (இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப்பீடத்தை மையப்படுத்திய ஆய்வு)***

(MS. Zunoomy, MAA. ASRIN - - மூன்றாம் வருடம்)

**ஆய்வுச் சுருக்கம்**

அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தங்களின் த.்.வா ஊடகமாக ஜபலுன்னூர் எனும் மலையை தெரிவுசெய்து தனது முதல் அழைப்பை (த.்.வாவை) ஆரம்பித்தார்கள். இன்று தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து இருக்கும் இக்கால கட்டத்தில் த.்.வாப்பணியை நிறைவேற்ற அனைத்து முஸ்லிம்களும் பொறுப்புடையவர்களாவர். இவர்களுள் த.்.வா பணிக்கென்றே பயிற்றுவிக்கப்படும் ஆலிம்கள் பல்வேறு வகைகளிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இத்தருணத்தில் அண்மைய வருடங்களாக அதிகம் உபயோகிக்கப்பட்டு வரும் சமூகவலைத்தளங்களை த.்.வா பணிக்காக அவர்கள் பயன்படுத்துவதிலுள்ள கவனயீனம் காரணமாக த.்.வா பணியில் இடைவெளி ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது. அதாவது த.்.வா பணிக்காக சமூகவலைத்தளங்களை பயன்படுத்தும் ஆலிம்கள் அவற்றில் செலவிடும் கால அளவு குறிப்பிட்டு சொல்லத்தக்க வகையில் இல்லாதிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனடியாக, இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தை சேர்ந்த இருநூறு மாணவர்களை பரீட்சிக்கின்றது. ஆலிம்கள் த.்.வா பணிக்கு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் கால அளவை அறியப்படுத்தல், த.்.வா பணிக்கு அவற்றின் முக்கியத்துவத்தை

உணர்த்தல், அவற்றை த.்.வா பணிக்கு சிறந்த முறையில் பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல் ஆகிய மூன்று தலையாய நோக்கங்களை கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் மூலம் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆலிம்கள் காலத்திற்கு ஏற்றாற் போல் சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி த.்.வா செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதை விட்டும், போதுமான நேரங்களை ஒதுக்குவதை விட்டும் கவனயீனமாக இருக்கின்றனர். என்பதை இவ்வாய்வின் முடிவாக எடுத்துக்கொள்ளலாம். இறுதியாக, த.்.வாப்பணி செய்ய சமூகவலைத்தளங்களை சிறந்த முறையில் பயன்படுத்த வழிகாட்டல் வழங்கப்படுவதால் இவ்வாய்வு காலத்தின் தேவையை உணர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதை நிரூபிக்கின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வு மூலம் ஆலிம்கள் சிறந்த வழிகாட்டல்களை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## *4. சுற்றுலாத்துறையின் விருத்தியினால் முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்; பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு*

(A.N.M.Nawas - இரண்டாம் வருடம்)

**ஆய்வுச் சுருக்கம்**
உலக நாடுகளில் மிக வேகமாக முன்னேறி வருகின்ற துறைகளுள் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். ஊலகம் சுற்றும் நபர்களின் எண்ணிக்கை 1997ல் 61.3 கோடியாக இருந்தது. 2020க்குள் 160 கோடியாக அதிகரிக்கும் என உலக சுற்றுலா அமைப்பு அறிவித்துள்ளது. இத்துறையானது ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் அதிக பங்களிப்பை யும் அதிக அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டித்தருவதிலும் அதிக பங்காற்றுகின்றது. இதேவேளை இன்று மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட சவால்களில் சுற்றுலாத்துறையின் விருத்தியினால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகமானதாகும். இந்த வகையில், பொத்துவில் அறுகம்குடா முஸ்லிம் மாணவர்கள் சுற்றுலாத்துறை விருத்தியினால் எதிர்நோக்குகின்ற கல்வி மற்றும் ஒழுக்கம் சார் பிரச்சினைகள் முக்கியமானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பொத்துவில் அறுகம்குடா பிரதேசமானது அலைச்சறுக்கல் விளையாட்டில் பிரசித்தி பெற்ற பிரதேசமாக இருப்பதனால் யுத்தத்திற்கு பிந்திய காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை “visit sri lanka year 2011” ன் பின்னர் வருடா வருடம் அதிகரித்த வண்ணமுள்ளது. இதன் காரணமாக இங்கு வாழும் மாணவர்கள் கல்வி மற்றும் கலாசார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த வகையில் இவ்வாய்வின் நோக்கமானது சுற்றுலாத்துறையின் விருத்தியினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதும், ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் சுற்றுலாப் பயணிகளின் பங்களிப்பினை இனங்காணுதல் மற்றும் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். இந்த ஆய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வு, நேர்காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்துக்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தில் உள்ள 3 பாடசாலைகளில் இருந்து 162 மாணவர்கள், 34 ஆசிரியர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டும், 50 பெற்றோர்கள், 3 ஆசிரியர்கள், 8 ஜும்ஆ பள்ளிவாசல்களின் இமாம்கள் ஆகியோரிடம் நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக சஞ்சிகைகள், புள்ளிவிபரத் திரட்டுக்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையம் என்பன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. இத்தரவுகள் பண்புசார்பாக இருப்பதனால் விடய விபரிப்புக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டது. இதற்கு MS Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வின் மூலமாக கல்வியில் பின்னடைவு, கலாசார சீரழிவுகள், குற்றச்செயல்கள் அதிகரிப்பு, சுகாதாரப் கேடு, பாலியல் பலாத்காரம், போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன. எனவே இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இவ்வாறான பிரச்சினைகளை களைவதற்கு நடவடிக்கை எடுப்பது இளைய சமூகத்திற்கு செய்ய வேண்டிய சேவையாகும்.

### *5. மத்ரஸா மாணவர்களின் இடைவிலகளுக்கான காரணிகள்- ஸர்கிய்யா அரபுக் கல்லூரியை மையப்படுத்திய ஆய்வு*

( A.M M. HIJAS - இரண்டாம் வருடம் )


**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மாணவனின் ஆரம்பக் கல்வியாக குர்ஆனியக் கல்வி அமைய வேண்டுமென்பது இஸ்லாமிய கல்வியலாளர்களது உறுதியான நிலைப்பாடாகும். அல்குர்ஆனுக்கும் மாணவர்களுக்குமிடையில் உயிரோட்டமானதொரு உறவை வளர்ப்பதில் அறபுக் கலாசாலைகளது பங்களிப்பு மகத்தானது. மனிதன மேம்பாட்டுக்கு உதவும் அறிவை வழங்கி வந்த அறபுக் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகிச் செல்வதானது ஓர் பிரச்சினையாக ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டதே இந்த ஆய்விற்கான பின்னனியாகும். இடைவிலகலைத் தூண்டும் காரணிகளைக் கண்டறிதல் இங்கு ஆய்வுப் பிரச்சினையாக நோக்கப்பட்டு அக்காரணிகளைக் கண்டறிவதும், அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமே பிரதான நோக்கமாகக் கருதப்பட்டு இவ்வாய்விற்கு கிழக்கின் முதல் அறபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை கிழகிலங்கை அறபுக் கல்லூரி ஆய்வுப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டு ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

சமூகவியல் பண்புசார் ஆய்வான இதில் ஆய்வுப் பிரதேச மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் பெறப்பட்ட நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் போன்ற முதலாம் நிலைத் தரவுகளினூடாகக் குறித்த அறபுக் கலாசாலை ஷரீஆ துறை மாணவர்கள் இடைவிலகியதற்கான காரணங்களை அடையாளப்படுத்தியுள்ளதோடு, அக்காரணிகள் அவர் சார் மட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் பாங்கினையும் கண்டறிந்து ஒரு விவரணஆய்வாக (Descriptive) இது முன்வைக்கப்பட்டுள்ளது. இடைவிலகலுக்கான காரணிகளில் மாணவர், குடும்பம், கல்லூரி, சமூகம் சார் காரணிகளாக முன்வைக்கப்பட்ட அனைத்துத் தகவல்களையும் வகைப்படுத்தி கல்லூரி சார் காரணிகளான பாடத்திட்டம், கற்றல், கற்பித்தல் முறைகள், ஆசிரியர் மாணவர் உறவு போன்ற காரணிகளை விரிவாக ஆய்வு செய்துள்ளனர். அத்துடன் இடைவிலகலைக் குறைப்பதற்கான கல்லூரியின் பாடத்திட்டம் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு மாணவர்களது ஆளுமை விருத்திக்கும், தொழில் வாழ்க்கைக்கும் தேவையான அம்சங்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். போன்ற முன்மொழிவுகளை இவ்வாய்வு பிரசவித்துள்ளது.


### *6. நுண்கடனும் அதனுடன் சம்பந்தப்பட்ட சமூகப் பிரச்சனைகளும் - ஒலுவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு*

( M.I INSHAF, A.N.M NAWAS - இரண்டாம் வருடம் )


**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தன்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் அதற்கான செலவீனங்களை எதிர்வு கொள்வதற்கும் நல்ல வருமானத்தைப் பெற கடுமையாக முயற்சிசெய்கிறான். அப்போதிய வருமானமில்லாதபோது, அவன் கடன் பெறவேண்டிய நிலைக்குள்ளாகிறான். ஆய்வுப்பிரதேசமான ஒலுவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற் நுண்கடன் திட்டத்தால் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களையும், பிரச்சினைகளையும் அடையாளங் காணுதல். நுண்கடன் திட்டத்தின் செயற்பாட்டு வடிவத்தை தெளிவுபடுத்தல். போன்ற நோக்கங்களைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புரீதியானதாகக் காணப்படும் அதேவேளை நுண்கடனைப் பெற்ற 5 பேரைக் கொண்ட 55 குழுக்கள் மற்றும் 3 பேரைக்கொண்ட 2 குழக்களிலிலிருந்து சுமார் 281 கடன்பெற்றவர்களில் 68 கடனாளிகள் நேர்காணல் மூலம் ஆய்வுக்குறபடுத்தப்பட்டனர். இதன்போது நேர்காணல் மற்றும் அவதானம் என்பவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் வாழும் அதிகமானோர் தங்களது வறுமை காரணமாகவே நுண்கடன் வழங்குபவர்களை அறிந்து அவர்களை நாடிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் காணப்படுகின்றது. சிறுசிறு தேவைகளுக்காக குறிப்பாக சிறு சுயதொழில் முயற்சிகள், அன்றாட வீட்டுச் செலவுகள் போன்ற காரணங்களுக்காகவே நுண்கடன்களைப் பெற்றுள்ளனர். அதனைக்

பெற்று அதிக வட்டிவீதம், போதியளவான வருமானமின்மையினால் அக்கடனை மீளச்செலுத்த முடியாமல் இம்மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். தங்களது சொத்துக்களை விற்று குடும்ப உறவினர்களுடன் பகைத்துக் கொண்டதுடன் மனஉழைச்சலுக்கும் ஆளாகியுமுள்ளனர். இதனால் இவ்வாய்வுப் பிரதேசத்தில் நுண்கடனின் மூலமாக பல்வேறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்ற முடிவிற்கு வரலாம்.

7. ***முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி முன்னெற்றத்தில் பாடசாலைகளின் நூலகத்தின் பங்களிப்பு- கம்பஹா மற்றும் மினுவங்கொட கல்வி வலையங்களை மையப்படுத்திய ஆய்வு***

(M.Y.F NOUFIYA, M.H HUSNA - மூன்றாம் வருடம்)

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாத்தின் தூது வாசிப்பிலிருந்தே ஆரம்பமாகியது. முஸ்லிங்களின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அடித்தளமாக வாசிப்பு மற்றும் நூல்கள் திகழ்ந்தன என்பதற்கு வரலாற்றிலிருந்தே பல சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன. ஐரோப்பாவின் இருண்ட காலத்தை முஸ்லிங்களின் நூல்களும் நூலகங்களுமே விளக்கேற்றியது என்றால் மிகையாகாது. ஆனால் இன்று முஸ்லிம் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு அருகி வருகின்றது.

ஆய்வுப்பிரதேசமான கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயத்திற்கு உட்பட்ட சில பாடசாலைகளில் உயர்தரம் கற்கும் மாணவர்களுள் நூலகங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபாடு காட்டுவோரின் அளவை கண்டறிதலையும், நூலகங்களை பயன்படுத்தாது வெறுமனே பாடப்புத்தகங்களோடு மாத்திரம் தம்மை சுருக்கிக்கொள்வதற்கான காரணங்களை இனங்காண்பதையும் மேலும் பரீட்சை மையக்கல்வி மாற்றம் பெற்று முஸ்லிம் சமூகத்தில் பெரும்பான்மையினர் கல்வியியலாளராக, முஸ்லிம் இளம்தலைமுறையினராக மாற வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் பரீட்சை மையக்கல்வி முன்னுரிமைப்படுத்தப்படுவதும் நூலகங்களின் அவசியம் குறித்து இன்னும் உணர்த்தப்படாமை மற்றும் உணரப்படாமை நூலகத்திற்கான அமைதியான, சிறந்த சூழல் காணப்படாமை, முறையாக பயிற்றுவிக்கப்படாத நூலகர்களின் கவனயீனம்,பொடுபோக்கு போன்ற காரணங்களால் நூலகங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. மேலும் பாடசாலை நூலகப்பயன்பாட்டை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவ்வாய்வில் முன்வைக்கப்படடுள்ளன.பண்பு ரீதியானதாவும், எண்ணிக்கை ரீதியானதாகவும் காணப்படும் இவ்வாய்வின் முடிவுகளுக்காக முதலாம் நிலைத்தரவுகளான வினாக்கொத்து,நேர்காணல் மற்றும் அவதானங்கள் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர கலை மற்றும் கலாசார பீட சர்வதேச ஆய்வரங்கிற்கு மாணவ ஆய்வு மன்றத்தின் மூலம் அனுப்பப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் உள்ளன. அவ் ஆய்வரங்கு எதிர்வரும் 2018.12.17 ஆம் திகதியன்று நடைப்பெற உள்ளது.

- ஆய்வுச் சஞ்சிகை

  மாணவ ஆய்வு மன்றத்தின் மிகப் பெரும் படைப்பான ‘‘ஆய்வுக்குரல்’’ எனும் ஆய்வு சஞ்சிகை எதிர்வரும் 2018.12.12 ஆம் திகதியில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான ஆக்கங்களாக ஆய்வுக் கட்டுரைகள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டன. அதில் மிகச் சிறந்த கட்டுரைகளைக் கொண்டு இச் சஞ்சிகை வெளியிடப்பட்டது.